# பாரதியார் சிந்தனைகள்




பதிப்பாசிரியர்கள்

முனைவர் இரா.கார்த்திகேயன்

முனைவர் ஆ.மகாலட்சுமி

முனைவர் த.கீதாஞ்சலி

முனைவர் மு.நவமணி

முனைவர் எஸ்.மீனாம்பிகை

தேசமான்ய த.தர்மகுலசிங்கம்

* பாரதியாரின் விநாயகர் நான்மணிமாலையில் காணலாகும் வழிபாட்டு முறைகள் 94
திருமதி ந.தமிழரசி

* பாரதியார் கவிதைகளில் அச்சம் மெய்ப்பாடு 102
செ.பவித்ரா

* பாரதியாரின் படைப்பிலக்கிய சிந்தனைகள் 114
இலக்கியப்பிரியா. சி

* பாரதியாரின் புதிய ஆத்திசூடி 124
முனைவர் அர.சுதா

* பாரதியின் கருத்தியல் - இன்றைய மானிடவியலின் தேவை. 133
முருகேஸ்வரி. ச

* விடுதலைப் போராட்டத்தில் இதழாளர் பாரதியின் பங்கு
அ.காயத்ரி 143

* கண்ணன் பாட்டில் உளவியல் சிந்தனைகள்
முனைவர் ரா. விஷ்ணு பிரியா 150

* பாரதியாரின் பன்முகத் தன்மை
முனைவர் ரா.திவ்யா 155

* பாரதியாரின் பெண்ணுரிமை சிந்தனைகள்
S.மீனாம்பிகை 162

* பாரதியார் பாடல்களில் மனிதவள மேம்பாடு
மு.சுமதி 168

* பாரதியாரின் சிந்தனைகள்
முனைவர் நா.ரம்யா 173

* பாரதியாரின் பாப்பா பாட்டு
PUNITHA SELVARAJAN 178

# பாரதியாரின் பன்முகத் தன்மை

முனைவர் **ரா.திவ்யா**
உதவிப் பேராசியர்,
நல்லமுத்துக்கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி,
பொள்ளாச்சி.

பாரதியார் பலதுறைகளில் கால்தடம் பதித்த தேசிய கவியின் வாழ்வு முப்பத்தொண்பதாண்டுகளே நீடித்தது. இந்தியா முழுவதும் சுதந்திர போராட்டம் நீடித்திருந்த வேளையில் கவிதைகளால் சுதந்திரகீதங்களைப் பாடினார். வறுமையிலே வாடிய வாழ்வு தான் பாரதி வாழ்க்கை. சிறுவயதிலேயே அவருக்கு அற்புதமான கவிதைகளை எழுதும் ஆற்றல் வந்துவிட்டதாக அவருடைய சிறுவயதுத் தோழரான சோமசுந்தரபாரதி கூறியிருக்கிறார். பாரதியின் சூழல் நடைமுறை நிலையில் இருந்து மாறுபட்டுள்ளது. 1904 முதல் 1921 செப்டம்பர் 11 வரை வாழ்ந்த பாரதியின் வாழ்நாட்கள் தான் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தவையாகும். 1904 முதல் 1908 வரை சென்னையில் பத்திரிக்கை ஆசிரியராக ,மேடைப் பேச்சாளராக மாநாட்டுப் பிரதிநிதியாக ,சங்க அமைப்பாளராக தீவிர இயக்கத்தாரோடு தொடர்பு கொண்டவராக வளர்ந்தார்.

**நமக்குத் தொழில் கவிதை**
**நாட்டுக்குழைத்தல்**
**இமைப்பொழுதும் சோராதிருத்தல்**

என்று தனக்குத் தொழில் நாட்டுப்பணி என ஆணித்தரமாகக் கூறி கவிதை தான் தனக்குத் தொழில் எடுத்துரைக்கிறார். பாரதம் என்பதற்கு இலக்கணம் வகுக்கும் பாரதியார் **பாருக்குள்ளே நல்லநாடு எங்கள் பாரதநாடு** என்று பண்ணிசைத்தார். எட்டையபுரத்தில் தான் வாழ்ந்த காலத்தில் பாரதம் தன் பெருமையினை இழந்து தாழ்வுற்றிருந்தது தாழ்வுற்ற பாரதம் தலைநிமிர்ந்திட

**இதந்தருமனையின் நீங்கி இடர்மிகுசிறைபட்டாலும்**
**பதந்திரு இரண்டும் மாறிப் பழிமிகுந்திழிவுற் றாலும்**
**....................................................**
**சுதந்திரதேவிநின்னைத் தொழுதிடல் மறக்கிலேனே**

என்று விடுதலை வேட்கையை மக்களிடையே உருவாக்கினார்

**விடுதலையுணர்வு**

தன் ஞானத்தந்தை விவேகானந்தர் கடைசிக் காலத்தில் தேசபக்தி இயக்கத்திலிந்து விலகியபோது பாரதி அவரை விமர்சிக்கத் தயங்கவில்லை. மக்கள் இயக்கத்தை விட்டு அரவிந்தர் விலகி ஒதுங்கிய போது அவரையும் விமர்சித்திருக்கிறார் என்று அறியமுடிகிறது.

பாரதியின் கவிதைகளில் விடுதலை உணர்வு ,பெண் விடுதலை, சாதி மறுப்பு குறித்து எழுதினார். 1949-ல் பாரதியாரின் நூல்கள் முதன் முதலாக நாட்டுமையாக்கப்பட்டன. 1989-ம் ஆண்டு தொழிலில் ஏற்பட்ட நட்டத்தினால் வறுமை நிலையினை அடைந்தார்.

**யாமறிந்தமொழிகளிலேதமிழ்மொழிபோல்**
**இனிதாவதெங்கும் காணோம்.**

எனபாடுவதற்கு சமஸ்கிருதம் ,வங்காளம், இந்தி ,பிரான்சியம், ஆங்கிலத்தில் தனிப்புலமை பெற்றிருந்தமையே.

**முப்பதுகோடிமுகமுடையாள் உயிர்**
**மொய்ம்புறவொன்றுடையாள்- இவள்**
**செப்புமொழிபதினெட்டுடையாள்,எனில்**
**சிந்தனைஒன்றுடையாள்**

என்று விடுதலைப் பாடல்களை வீறுடன் பாடினார். பாரதியின் கவிதைகளில் கவித்துவம் உண்டு. உணர்ச்சி உண்டு. பாரதி உரைநடையில் கதைகள், கட்டுரைகள் நிறைய எழுதியுள்ளான்.

பாரதியன் உரைநடை இலக்கியங்களில் தெளிவான சிந்தனை, கொள்கை,கோட்பாடுகள் இடம் பெற்றுள்ளன.

**சொந்தநாட்டில் பிறர்க் கடிமைசெய்தே**

**துஞ்சிடோம்! இனி! அஞ்சிடோம்!**

**என்றெமதுஅன்னை கை விலங்குகள் போகும்**

என்றெல்லாம் தேசஉணர்வினை தேசம் போற்றும் தேசியகவி திகழ்ந்தார் என்பதைபாடல்கள் பறைசாற்றுகின்றன. விடுதலை என்கிறபோது **பூர்ணசுதந்தரம்** என்று அரசியல் பொருள் கொள்வதோடு நிறுத்திக் கொள்வதும் பாரதிவிஷயத்தில் சரிப்படாது. விடுதலை எனும் போது அவன் ஞானயோகத்தில் சொல்கிற **முக்தி**யையும் குறிக்கிறான். நாட்டின் அரசியல் விடுதலை, ஆத்மாவின் விடுதலை இரண்டையும் ஒருமையாகப் பாவித்து நடந்தவன் பாரதி. பிரித்துப் பார்க்கவோபிரித்துக் காட்டவோஅவன் செய்ததே இல்லை என்று புதுநெறிகாட்டிய புலவன் என்ற நூலில் பாரதியின் விடுதலைசார்ந்தஉணர்வின் வெளிப்பாடு நிலை பிரதிபலிக்கிறது.

மொழிப்பற்றும், தேசப்பற்றும் மிக்கவராய்த் திகழ்ந்தார். தாய்நாட்டின் மீது கொண்டிருந்த பற்றுபோற்றக் கூடியதாகும். அதனாலே பெற்றதாயும் பிறந்தபொன்னாடும் நற்றவவானினும் நனிசிறந்தன என்று உணர்வை வெளிப்படுத்துகிறார். சமுகபற்று, தேசப்பற்று அவரின் உயிராக இருந்தவை. பாரதி ஒன்றிணைந்த இந்தியாவை உருவாக்க முயன்றிருக்கிறார்.

அரசின் மீதுமக்கள் கொண்டுள்ளபயத்தைப் பற்றி,

**அஞ்சியஞ்சிச் சாவார்- இவர்**

**அஞ்சாதபொருளில்லைஅவனியிலே**

என்றுஅச்சத்தின் வெளிப்பாட்டினைகண்டிப்பதையும்,

**தந்தபொருளைக் கொண்டே-ஜனம்**

**தாங்குவார் உலகத்தில் அரசரெல்லாம்**

**அந்தஅரசியலை - இவர்**

**அஞ்சுதருபேயென்றெண்ணிநெஞ்’சம் அயர்வார்**

என்றுஅரசுபால் மக்கள் காட்டும் பயத்தைமுதலில் சுட்டுகிறார். மக்களின் வரிப்பணத்தில் இயங்கும் அரசினைக் கண்டுமக்கள் பயங்கொள்வதுதவறாகும் என்கிறார்.

அச்சத்திற்கு பிறப்பிடம் எது வென்று காரணத்தை அறிய விரும்புகிறார். அதற்கான மூலகாரணத்தை எடுத்துக்காட்டுகிறார்.

**கொஞ்சமோபிரிவினைகள் - ஒரு**
**கோடிஎன்றால் அதுபெரிதாமோ?**

என்றுநாட்டில் பிரிவினைவாதம் ஏற்பட்டுள்ளது. மக்கள் தொகைகோடி என்றால் அவர்களுக்கு ஏற்பட்டுள்ள பிளவுகள் அதைவிட பெரிதாக உள்ளது என்கிறார். மக்களுக்குள் கொள்கை வேறுபாடு காணப்படுகிறது. தத்துவப் பார்வையில் ஏற்பட்ட பிழையினைசாடுகிறார்.

**கஞ்சிகுடிப்பதற் கிலார் - அதன்**
**காரணங்கள் இவையென்னும் அறிவுமிலார்**

பிரிவினைகள் வளர்த்தது மட்டுமின்றி, தீது, சூதுவாதுகளின் காரணங்களைக் காணும் அறிவும் இல்லாமல் போய்விட்டது. நாட்டில் ஒற்றுமை வெளிப்படுமோ அதையொட்டியே அறிவும் ஆற்றலும் வெளிப்பட்டு நிற்கிறது.

பராசக்தியிடம் முறையிட்டு என் நம்பிக்கை பொய்யானால் நாத்திகனாக மாறிவிடுவேன் என்பதை, **வீட்டுக்காரச் செட்டியாருக்கு எத்தனை நாள் பொய் வாய்தா, பொய் வாய்தா தினம் கொடுமைதானா? சிச்சீ பராசக்தி உன்னை நான் நம்புவதை முற்றிலும் விட்டு நிச்சயமாய் நாத்திகனாய் விடுவேன்** என்று குறிப்பிடுவதை (புது நெறி காட்டிய புலவன்-ப.18) காண முடிகிறது. பாரதியின் பாடல்களில் விடுதலையுணர்வு மிகுதியாக காணப்படுகிறது. ஆதலால் தான் விடுதலை கவி என்றழைக்கப்படுகின்றனர். பாரத நாட்டை தெய்வமாகவும்,

தெய்வத்திற்கு சமமாகவும் பாடியுள்ளார். விடுதலை பெற்று மகிழ வேண்டும் என்றெண்ணி,

**ஆயிரம் உண்டிங்கு ஜாதி எனில்**
**அன்னியர் வந்து புகல் என்ன நீதி – ஓர்**
**தாயின் வயிற்றில் பிறந்தோர்- தம்முள்**
**சண்டை செய்தாலும் சகோதரர் அன்றோ**

தேச விடுதலையை போராகப் பாடினார். இதை **அவ நம்பிக்கைகளை என்னிடம் கொண்டு வந்து கொட்டாதீர்கள் வேண்டிய அளவுக்கு என்னிடம் உள்ளன. ஏதாவது நம்பிக்கை இருந்தால் கொடுங்கள் எனக்கு ஒளி வேண்டும்** உலகத்தாரை வேண்டிக் கொண்டதால் ஜெர்மாகிள மகாகவி கத்தே குறிப்பிடுவதை (புது நெறி காட்டிய பாரதி- ஆர். கே.கண்ணன் பக்.3) அறிய முடிகிறது.

**பெண்ணுரிமை**

பெண்கள் கல்விஅறிவைபெற்றவராகவிளங்கவேண்டும். அன்றைய சூழலில் பெண்கள் கல்விநிலையில் முன்னேறினால் ஒழுக்கத்தில் தவறிவிடுவார்கள் என்றநிலைபாரதியார் காலகட்டத்தில் இருந்தது.இக்காலட்டத்தில் பெண் விடுதலைக்குஎதிரானகருத்துக்களைஎதிர்கொண்டார். பெண்கல்விக்குபாரதிமுக்கியமைல்கல்லாகவிளங்கினார்.

**ஏட்டையும் பெண்கள் தொடுவதுதீமையென்**
**றெண்ணியிருந்தவர் மாய்ந்துவிட்டார்**
**வீட்டுக்குள்ளேபெண்ணைப் பூட்டிவைப் போமென்ற**
**விந்தைமனிதர் தலைகவிழ்ந்தார்**

**பட்டங்கள் ஆள்வதுஞ் சட்டங்கள் செய்வதும்**
**பாரினிற் பெண்கள் நடத்தவந்தோம்**
**எட்டுமறிவினில் ஆணுக்கிங்கேபெண்**
**இளைப்பில்லைகணென்றுகும்மியடி**

இப்பாடலில் பெண் விடுதலைபற்றியதாகும். பெண் கல்வியை தீமை என்று கருதியவர்கள் அழிந்து விட்டதாகக் குறிப்பிடுகிறா வீட்டுக்குள் பெண்கள் இருக்க வேண்டுமிருந்த நிலைமாற வேண்டும் என்ற சூழ்நிலை கடந்து விட்டமையைக் குறிப்பிடுகிறார். பெண் கல்விமடமையைப் போக்கும் கருவி. பெண் சுதந்திரதாகத்தைஎழுத்துக்கள் பதித்தவர். **மாதர் தம்மை இழிவுசெய்யும் மடமையைக் கொளுத்துவோம்** என்று பெண்ணுரிமைக்காகக் குரல் கொடுத்தார். பெண் யாருக்கு அடிமை இல்லை. சமூகத்தில் தலைநிமிர்ந்து இருக்க வேண்டியவள்.

**நிமிர்ந்தநன்னடைநேர்கொண்டபார்வையும்**
**நிலத்தில் யார்க்கும் அஞ்சாதநெறிகளும்'**
**திமிர்ந்தஞானச் செருக்கும் இருப்பதால்**
**செம்மைமாதர் திறம்புவதில்லையாம்**

என்று பாட்டோடு நின்றுவில்லை என்பதை நிவேதிதையை தன் குருவாக கொணடிருந்ததில் இருந்து என அறியலாம். இதனை பெ.சு.மணி இராமகிருஷ்ண இயக்கச் சான்றோர்களில் பாரதியாரைமுதலா வதாகவும், முழுமையாகவும் ஆட்கொண்டவர் சகோதரி நிவேதிமை. பாரதியாரின் பொதுவாழ்க்கைப் பிரவேசத்தில் திசைகாட்டியாகவும் பாரதியின் அரசியல் சமூக, ஆன்மீகப் பணிகளுக்கு திட்டவட்டமான வடிவமைப்பையும் அளித்தவர் சகோதரி நிவேதிதை என்று கதை கலைஞர் பாரதியார் - முனைவர் சிவ.மாதவன் என்ற நூலில் குறிப்பிட்டுள்ளமையைஅறியமுடிகிறது.

**கண்ணன் பாட்டு குயில் பாட்டு**

புதுச்சேரியில் 1912-ம் ஆண்டுக்குப் பிற்பட்ட ஒரு குருகிய காலத்தில் கண்ணன்பாட்டு, பாஞ்சாலி சபதம், குயில் பாட்டு நூல்களை எழுதினார். பத்தரிக்கைகளில் அரசாங்கம் நெருக்கடி கொடுத்த சமயத்தில் வ.வே.சு அய்யரின் சந்திப்பும்

வங்கத்திலிருந்து அரவிந்தரின் சந்திப்பு கிடைத்த நேரத்தில் இயற்றினார். இம்மூன்று பாடல்களும் தனிச்சிறப்பு வாய்ந்தவையாக கருதப்பட்டன.

தேச பக்தியின் கருவூலம் பாஞ்சாலி சபதம் பாரத நாடு அடிமைப்பட்டு கிடந்த நிலையை பின்புலமாக வைத்து பாஞ்சாலியை பாரதத் தாயாக வைத்து மகாபாரதத்தின் திருப்பு முனையாக அமைந்த கட்டத்தை காவியத்தின் கருவாகப் பயன்படுத்தியிருக்கிறார்.

தெய்வபக்தியின் கருவாக கண்ணன் பாட்டினை வேதாந்த பார்வையில் நடைமுறைக் கோட்பாடுடன் பாடியுள்ளார். கண்ணன் என் தோழன், என் தாய், தந்தை, சேவகன், அரசன், சீடன், சற்குரு, விளையாட்டுப் பிள்ளை, ஆண்டான், என் காதலி, என் குழந்தை, என் குலதெய்வம் என மொத்தம் 23 பாடல்கள் பொதுவாக சைவ, வைணவ மரபுகளின் அனைத்து அடியார்களும் தெய்வத்தை நாயகன் என்றும் தங்களை நாயகி என்றும் கருதியே பாடிய நிலையில், பாரதியாரோ கண்ணன் என்று ஆண்மை தன்மையுடனும், கண்ணம்மா என்று பெண் தன்மையுடனும் இரண்டாகப் பாடியிருக்கிறார்.

**துணைநூற்பட்டியல்**

1. பாரதி - பார்த்திபராஜா
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி)
41-பி சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்
அம்பத்தூர், சென்னை-98

2. கதைககலைஞர் - பாரதியார் முனைவர் சிவ.மாதவன்
பதிப்புடிசம்பர் 2004
குமாரிபதிப்பகம்
13 திருநாவுக்கரசர் வீதி,
விசுவநாதன்நகர்,
புதுச்சேரி-3